# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் ஜெர்மன் - பெர்லினிலுள்ள மஸ்ஜித் கதீஜா பள்ளிவாசலில்
## 17.10.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அத்தவ்பாவின் 18 மற்றும் 71 -வது வசனத்தை ஓதினார்கள்:**

பொருள் : அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டு தொழுகைகளை நிலைநாட்டி, ஸகாத்து கொடுத்து அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் அஞ்சாதவர் மட்டுமே அல்லாஹ்வின் மஸ்ஜிதுகளை நிர்வகிப்பார். இத்தகையவர்களே விரைவில் வெற்றி பெறக்கூடியவர்கள். (9:18)

நம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும் தங்களுக்கிடையே ஒருவருக்கொருவர் நண்பர்களாவர். அவர்கள் நல்லவற்றைக் கொண்டு ஏவுகின்றனர். தீயவற்றிலிருந்து தடுக்கின்றனர். தொழுகையை நிலைநாட்டுகின்றனர். ஸகாத்து கொடுக்கின்றனர். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு நடக்கின்றனர். இவர்களுக்கே அல்லாஹ் கருணை காட்டுவான். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனும், நுட்பமான ஞானமுள்ளவனுமாவான். (9:71)

அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹ் தனது அருள்மழையின் துளிகளை இந்த மஸ்ஜிதின் வடிவில் மீண்டும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது விழச் செய்துள்ளான். நாட்டின் கிழக்குப் பகுதியில் இது நமது முதல் மஸ்ஜித் ஆகும். பெர்லின் நகரம் முக்கியத்துவம வாய்ந்தது. இந்நகரில் அஹ்மதிய்யா ஜமாஅத் மூலம் உண்மையான இஸ்லாத்தின் செய்தி இவர்களுக்கு வந்து சேர்ந்துள்ளது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சுற்றுப் பயணத்தின்போது இங்கு முபல்லிக்குகள் வந்தனர். ரிப்போர்ட்டின் படி இங்கு ஜெர்மனி மக்களிடம் ஒரு நற்பேறு காணப்படுகிறது. உண்மையான இஸ்லாத்தை புரிந்து கொள்வதன் பக்கம் இவர்களின் கவனம் திரும்பியுள்ளது. நமது முபல்லிக்குகள் இந்த நகருக்கு – இந்த நாட்டிற்கு வந்தனர். அவர்களது முயற்சிகளைப் பற்றி சிறிது கூறுகின்றேன். இந்த மஸ்ஜிதின் நிர்மாணத்துடன் அவர்களது முயற்சி தொடர்புடையதாகும் என்று நமக்கு வந்த தகவல்களிலிருந்து தெரிய வருகிறது. இந்த நகரத்தின் அச்செய்திகளை நான் கூறக்காரணம் இங்குள்ள இளைஞர்களுக்கு தெரிய வேண்டும்; இந்நகரின் வரலாறு அவர்களுக்குப் புரிய வேண்டும். அவர்கள் இந்த நகரத்தில் வசிக்கின்றனர். அல்லது உலகில் எந்தப் பகுதியில் வசிப்பவராக இருந்தாலும் இந்த வரலாறு தெரியும்போது அவர்களுக்கு துஆவின் பக்கம் கவனம் திரும்பும். எந்த நிலையில் நமது ஆரம்பகால மவ்லவிகள் அந்த நாட்டிற்கு சென்றனர். அவர்கள் ஆரம்ப காலத்தில் பெரும் தியாகத்துடன் தமது நாட்டிலிருந்து வெளியேறி அங்கு சென்றனர். தற்போதைய காலத்தில் ஜமாஅத்தின் பொருளாதார நிலை நல்ல நிலையில் உள்ளது. அன்றைய காலத்தில் பொருளாதாரம் இந்த அளவு இருந்ததில்லை. ஆனால், எந்த வசதிவாய்ப்பும் இல்லாத நிலையிலும் அஹ்மதிய்யத்திற்காக தொண்டாற்றும் ஆர்வம் இருந்ததனால், அஹ்மதிய்யத்தை அம்மக்களிடம் அறிமுகம் செய்ய முடிந்தது. எல்லாவற்றிற்கும் அதிகமாக அம்மக்களிடம் துஆவின் பக்கம் மிகுந்த கவனம் இருந்தது. எனவே, ஜமாஅத்தின் முன்னேற்றம் குறித்த எதிர்பார்ப்பும் அவர்களிடம் அதிகம் இருந்தது.

1922 ஆம் ஆண்டு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஜெர்மனியில் ஜமாஅத்தை நிறுவ முடிவு செய்தார்கள். மவ்லவி முபாரக் அலி சாஹிப் பெங்காலியை அனுப்புவது என்றும், அங்கு சென்று அவர் பிரச்சாரத்தை தொடர வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. மவ்லவி முபாரக் அலி சாஹிப் 1920 –ல் இலண்டனில் முபல்லிக்காக பணியாற்றி வந்தார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வழிகாட்டலுக்கு இணங்க 1922 –ல் அவர் இலண்டனிலிருந்து பெர்லின் வந்தார். பிறகு அவர்களுக்கு உதவி செய்வதற்காக மவ்லவி குலாம் பரித் சாஹிபை அங்கு அனுப்புவதற்காக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். அவர் 1923 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதி காதியானிலிருந்து ஜெர்மனி சென்றார். டிசம்பர் 18 ஆம் தேதி காலையில் அவர் இங்கு வந்தடைந்தார். ஜெர்மனி வந்தடைந்த பிறகு மவ்லவி முபாரக் அலி சாஹிபுடைய முயற்சியின் பலனால்

அல்லாஹ்வின் அருளால் கிடைத்த பலன்கள் பற்றி ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 1927 ஆம் ஆண்டு பிப்ரவரி 2 ஆம் தேதி குத்பாவில் கூறினார்கள்.

அவரது ரிப்போர்ட்டுகள் நமக்கு மிகப்பெரும் நம்பிக்கையை ஏற்படுத்துகின்றன. மேலும் அந்நாட்டில் நாங்கள் வெற்றி பெறுவோம் என்ற ஓர் உறுதியான எண்ணம் நமது மவ்லவிக்கு உள்ளது. அதனை அவரது தொடர்ச்சியான ரிப்போர்ட்டுகள் மூலம் அறிய முடிகிறது. மேலும் அங்கு உடனே ஒரு பள்ளி கட்டப்பட வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு ஜெர்மனி செல்ல வேண்டும் என்ற எண்ணம் அப்போது இருக்கவில்லை. அவரது முயற்சிகள் விண்ணப்பங்கள் பற்றி குறிப்பிடும்போது கூறினார்கள். அவரது கோரிக்கைக்கு ஏற்ப உடனே அங்கு (ஜெர்மனி) ஓர் மஸ்ஜித் உருவாக்க வேண்டும். வெற்றிக்கான எதிர்பார்ப்பு உள்ளது. இதனை அலட்சியப்படுத்துவது இயக்கத்தின் வளர்ச்சிக்கு நஷ்டம் ஏற்படுத்துவதாகும். எனவே உடனே அங்கு ஒரு நிலத்தை வாங்குங்கள்.

இவ்வாறு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய வழிகாட்டலுக்கு இணங்க மவ்லவி முபாரக் அலி சாஹிப் அதன் பக்கம் கவனம் செலுத்தினார். உடனடியாக பெர்லின் நகரில் ஓர் இடம் வாங்கப்பட்டது. பெர்லினில் பள்ளி கட்ட ஏற்பாடு முடிந்ததும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் 1923 ஆம் ஆண்டு பிப்ரவரி 2 ஆம் நாள் ஒரு திட்டம் வகுத்தார்கள். அதன்படி பெர்லின் மஸ்ஜித் அஹ்மதி பெண்களின் சந்தாக்கள் மூலம் உருவாக வேண்டும். இதற்காக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஐம்பதாயிரம் ரூபாய் திரட்ட அறிவிப்பு செய்தார்கள். லஜ்னா இமாயில்லாஹ் உருவான பிறகு அவர்களுக்கு இது ஒரு பெரிய பொருளாதார திட்டமாகும். இத்திட்டம் அஹ்மதி பெண்களின் தகுதியை மிகவும் உயர்த்தி விட்டது. அவர்களிடம் தூய்மை இறைவனுக்காக பணி செய்யும் தன்மை அதிகரித்தது. அதற்கு ஈடிணை கிடையாது. அப்போது இந்தியா-பாகிஸ்தான் ஒன்றாக இருந்தது. காதியான் லஜ்னாக்கள் அக்காலத்தில் செய்த சாதனைக்கு ஈடாக வரலாற்றில் எந்தவொரு முன்மாதிரியும் இல்லை. அத்தகைய ஒரு புரட்சி அக்காலத்திய லஜ்னாக்களிடம் உருவாகியிருந்தது. தமது செயல்பாடுகள் மற்றும் ஆர்வத்தில் ஓர் விழிப்புணர்வு காணப்பட்டது. அது இப்போது வரை நிலை நிற்கிறது. அஹ்மதி பெண்கள் எடுத்து வைத்த தொகை முதல் நாளே 8000 ரூபாயாக இருந்தது. காதியான் பெண்கள் அதனை செய்தனர். இரண்டு மாத காலத்திற்குள் 45000 ரூபாய்க்கான வாக்குறுதி தந்தனர். தொகையும் வசூலானது. பிறகு செலவுகள் இன்னும் அதிகமாகும் வாய்ப்புகள் ஏற்பட்டன. உடனே ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் அவர்கள் இன்னும் சிறிது தவணை வழங்கி டார்கெட்டையும் 70000 ரூபாயாக உயர்த்தினார்கள். அல்லாஹ்வின் அருளால் அஹ்மதி பெண்கள் 72 ஆயிரத்து 600 ரூபாய் தொகையை திரட்டினார்கள்.

சுருக்கமாக, 1923 -ல் ஏப்ரல் 5 ஆம் நாள் பெர்லின் மஸ்ஜிதுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அதில் ஜெர்மனியின் அமைச்சர்கள், துருக்கி ஆஃப்கானிஸ்தானுடைய அதிகாரிகள், பல பத்திரிகையாளர்களும் அவ்விழாவில் கலந்து கொண்டனர். விருந்தினர்களின் எண்ணிக்கை அப்போது 400 ஆக இருந்தது. இது தான் அக்கால முபல்லிக் உடைய முயற்சியாகும். இத்தகைய ஒரு பரந்த தொடர்பை அவர்கள் பெற்றிருந்தனர். அதனால் பெரும் பெரும் பிரமுகர்கள் அடிக்கல்நாட்டு விழாவிற்கு வருகை தந்தனர். அடிக்கல் நாட்டப்பட்டது. பிறகு உலகப்போரின் தாக்கங்கள் வெளிப்படத் தொடங்கின. அதனால் பள்ளிவாசலுக்காக செலவு செய்ய வேண்டிய தொகையும் அதிகமாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. நாம் திட்டமிட்ட பணியை முடிக்கவே பதினைந்து லட்சம் ரூபாய் ஆகும் என்று மதிப்பிடப்பட்டது. அப்போது ஜமாஅத்திடம் அவ்வளவு வசதியில்லை. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இரு தலைமையகங்களை ஏற்படுத்துவது சிரமம் என்று கருதினார்கள். 1924 ஆம் ஆண்டு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பெர்லின் மிஷன் ஹவுஸ் நிர்மாணத்தை நிறுத்தி விடுவது என்று முடிவு செய்தார்கள். பொருளாதார வசதி இல்லை. செலவு அதிகம் தேவைப்படும். நாட்டின் சூழ்நிலை மிகவும் மோசமாகி விட்டிருந்தது. ஆனால், அஹ்மதிப் பெண்கள் செய்த தியாகங்கள் அவர்கள் அளித்த தொகை இலண்டனுக்கு அனுப்பப்பட்டது. அல்லாஹ்வின் அருளால் மஸ்ஜித் ஃபஸ்ல் - இலண்டன் அதன் மூலம் உருவானது. 1948 -ல் ஷேக் நாஸிர் அலி சாஹிப் மீண்டும் ஜெர்மனி வந்து பிரச்சாரம் தொடங்கினார். இப்போது அல்லாஹ்வின் அருளால் நான் கூறியது போன்று

பயணத்திற்கு நல்ல வசதிகள் ஏற்பட்டு விட்டன. ஜமாஅத்தின் பொருளாதார நிலையும் மிகவும் அதிகம். அக்காலத்தில் கடல் பயணம் செய்ய வேண்டியிருந்தது. குலாம் பரிது சாஹிபிற்கு ஜெர்மனிக்கு கடல் வழியாக போய் சேர்வதற்கு 22 நாட்கள் ஆகின. அவர் திருக்குர்ஆனுக்கு சொற்பொருளும், சிறிய குறிப்புகளும் எழுதியவர். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் குறிப்பின் அடிப்படையில் அதனை எழுதினார். இவ்வாறு ஆங்கிலத்தில் Five volume திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு மற்றும் விளக்கமும் இவருடையதுதான். அதற்காக குழுவும் நியமிக்கப்பட்டிருந்தது என்றாலும் அதிகமான பணியை அன்னார் செய்திருந்தார்கள். திருக்குர்ஆனின் வார்த்தைகளுக்கு ஒரு Dictionary -யும் தயார் செய்தார்கள். ஆனால், அது அப்போது வெளியிட முடியவில்லை. ஆனால் இப்போது கடந்த ஆண்டு அது முழுமைப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டது. மேலும் மலிக் சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் சஹாபி ஆவார்.

இவ்வாறு இங்கு வந்த மவ்லவி முபாரக் அலி சாஹிபையும் அறிமுகப்படுத்துவேன். அவர் 1909 -ல் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கையில் பைஅத் செய்தவர். பங்களாதேஷ் நாட்டைச் சார்ந்தவர். 1917 ஆம் ஆண்டு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மார்க்கத்திற்காக வாழ்வினை அர்ப்பணிக்கும் திட்டம் ஒன்றை ஏற்படுத்தினார்கள். அப்போது இளைஞர்கள் தாம் தயார் என்று தமது பெயரை எடுத்து வைத்தார்கள். அவர்களுள் ஒருவர் மவ்லவி முபாரக் அலி சாஹிப் ஆவார். 1969 ஆம் ஆண்டு பங்களாதேஷில் அன்னார் வஃபாத் ஆனார்கள் இதுதான் இங்கு பணிசெய்த ஆரம்பகால முபல்லிக்குகளின் நிலை. அவர்களின் தொடர்பு மிகவும் பரந்ததாக இருந்தது. வசதிவாய்ப்புகள் குறைவாக இருந்த நிலையிலும் கூட இப்போதுள்ள கொள்கைபரப்புநர்கள், முபல்லிக்குகள், தமது நிலையை ஆய்வு செய்வதற்கு இந்த பழைய முபல்லிக்குகளில் வரலாற்றை நிச்சயம் படிக்க வேண்டும்.

எவ்வாறிருப்பினும் அவர்கள் செய்த முயற்சிகள் கடினமாக இருப்பினும் அக்கால சூழ்நிலை காரணமாக மஸ்ஜித் உருவாக முடியவில்லை. ஆனால், காதியான் மற்றும் இந்திய பெண்கள் செய்த தியாகங்கள் வீண்போகவில்லை. அவர்களின் தியாகத்தினால்தான் இலண்டன் ஃபஸ்ல் பள்ளி கட்டப்பட்டது. அக்கால அஹ்மதி பெண்களின் தியாகம் மிக மிக உண்மையானதாக இருந்ததால், அதனை ஏற்றுக் கொள்ளுமாறு அவர்கள் வேதனையுடன் செய்த துஆக்களின் விளைவால்தான் அவர்கள் தமது வாழ்நாளில் ஒரு பள்ளியை உருவாக்கினார்கள் என்று நான் கருதுகிறேன். இன்று இன்னொரு பள்ளி கட்டும் போது அதில் அவர்களின் சந்ததிகளும் இணைந்துள்ளனர். எவ்வாறிருப்பினும் அக்கால பெண்களின் தியாக உணர்வுதான் இன்றும் இக்காலப் பெண்களிடம் மார்க்கத்திற்காக தியாகம் செய்யும் உணர்வை தக்க வைத்துள்ளது. இந்த மஸ்ஜித் 17 இலட்சம் யூரோ செலவில் கட்டப்பட்டுள்ளது. இதில் 4 இலட்சம் மட்டும் வெளியிலிருந்து வந்தது. மற்றும் 13 இலட்சம் இங்குள்ள லஜ்னாக்கள் சார்பாக தரப்பட்டது. அந்த 4 இலட்சத்தில் கூட பெரும் பங்கு U.K லஜ்னாக்கள் தந்ததாகும். 17 இலட்சம் யூரோ என்பது பாகிஸ்தான் ரூபாயில் சொல்வதாக இருந்தால் 19 கோடி ரூபாய் ஆகிறது. பாகிஸ்தானியர்களுக்காக கூறுகின்றனர். இந்த தியாகத்தை செய்தவர்களுக்கு எவ்வளவு நன்றியைத் தெரிவித்தாலும் அது குறைவுதான். அல்லாஹ் அவர்களுக்கு ஒரு பள்ளிவாசலைக் கட்டுவதற்கான வாய்ப்பினை வழங்கியுள்ளான். இந்த பள்ளிவாசலைப் பற்றிய சில விபரங்களைக் கூறுகிறேன். மொத்த பிளாட்டும் அக்காலத்தில் குறைந்த விலையில் கிடைத்தது. 13 மீட்டர் மினாரா கட்டுவதற்கு அனுமதி கிடைத்தது. இரண்டு ஹால்கள். பள்ளிவாசலுக்காக ஒரு ஹால். அடுத்து நான்கு அறைகள். இதில் ஒரு Guest House மற்றும் 4 அலுவலகங்கள், ஒரு நூலகம், ஒரு Conference அறை. குழந்தைகள் விளையாட ஒரு சிறிய பார்க். இப்பள்ளிவாசலை உருவாக்க கடும் எதிர்ப்பு வந்ததும் உங்களுக்கு தெரியும். ஆனால் எதிர்ப்பு சிறிது சிறிதாக குறைந்து வருகிறது. இன்ஷா அல்லாஹ் முற்றிலும் அகன்று விடும். இங்கிருந்து அமைதியின் தூதுச் செய்தி முழு உலகிலும் பரவும்.

ஐரோப்பாவில் நாகரிகத்தின் மோகம் அவர்களை சிதைத்து விடாமல் இங்குள்ள பெண்கள் செய்த தியாகத்தின் விளைவை நாம் பார்க்கிறோம். நாகரிக மோகத்தில் இப்பெண்கள் வீழ்ந்திருப்பதாக சில புகார்கள் அவ்வப்போது வந்த போதிலும் அவர்கள் செய்த தியாகத்தின் பலன் இப்போது கிடைத்துக் கொண்டிருக்கிறது. தியாகம் செய்த அனைவருக்கும் இறைவன் அளவற்ற கூலியை தருவானாக. அவர்களின் பொருளிலும் உயிரிலும் அல்லாஹ் அளவற்ற பரக்கத்துகளை வழங்குவானாக.

உலகின் எல்லா பகுதியிலும் நாம் இக்காட்சியை காண்கிறோம். அஹ்மதி ஆண்களும் பெண்களும் விரைந்து தியாகம் செய்ய முன்வருகின்றனர். அதனைப் பார்க்கும் போது, நாம் திகைப்படைந்து விடுகிறோம். இன்னொரு வியக்கத்தகு ஒற்றுமை 1923 -ல் பெர்லின் மஸ்ஜிதின் நிர்மாணம் தொடங்கியது. அபாயகரமான சூழ்நிலையால் அது முடிவு பெறவில்லை. ஆனால், அல்லாஹ் இக்காலத்தில் தனது மஸீஹின் ஜமாஅத்திற்கு அந்த அருளை வழங்க முடிவு செய்துள்ளான். எனவே இப்போது பள்ளிவாசல் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அஹ்மதியின் பொருளாதாரத்தில் அல்லாஹ் எப்போதும் அருள்களை வழங்குவான் என்று நாம் நம்பிக்கை வைப்போம். ஒருவர் என்னிடம் கூறினார். வருமானத்திற்கான பட்ஜெட் தாக்கல் செய்யும் போது அதனை பார்வையிடுகிற அதிகாரிகளால் அஹ்மதிகளின் செலவுக் கணக்கை ஏற்க முடிவதில்லை. காரணம் அவர்கள் வீட்டிற்காக செலவழிக்கும் தொகையை விட சந்தாவுக்காக செலவழிப்பது அதிகமாக இருக்கிறது. இது எப்படி சாத்தியம்? ஒவ்வொரு அதிகாரியும் கேட்கின்றனர். இதுவும் அல்லாஹ்வுடைய அருளை எல்லா புறத்திலிருந்தும் ஈர்த்துக் கொண்டு வருகிறது. தமது செலவை குறைத்துக் கொண்டு தியாகம் செய்கின்றனர். இந்த ரூஹை - உயிரை நிலைநாட்டுவது, தியாகம் செய்ய வாய்ப்பு கிடைக்கும் போது நன்றி செலுத்துவது ஒவ்வொரு அஹ்மதிக்கும் கடமையாகும். உண்மையான மூஃமின் இந்த ரூஹை மரணிக்க விடுவதில்லை. தாம் செய்யும் தியாகத்திற்காக பெருமைப்படுவதும் இல்லை. இது அல்லாஹ் உங்கள் மீது செய்த அருளாகும். இதற்காக அவன் முன்னால் குனிந்து கொண்டே செல்லுங்கள். நீங்கள் இப்பள்ளிவாசலின் உரிமையை வழங்குங்கள். உங்கள் குழந்தைகளுக்கும் பயிற்சி அளியுங்கள். அவர்களும் மஸ்ஜிதின் உரிமையை நிறைவேற்ற வேண்டும். அஹ்மதி பெண்களுக்கும் கூறுகிறேன். அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் செய்த தியாகம் பலன் தருவதற்கு இதிலிருந்து பலன்பெற முயற்சி செய்ய வேண்டும். அம்முயற்சி வெற்றி பெறுவதற்கு குழந்தைகளுக்கு பயிற்சி அளிப்பது அவசியமாகும். அதுவும் இறைவன் நமக்கு அறிவுறுத்திய அளவுக்கு பயிற்சி குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும். பள்ளிவாசலுடன் அவர்களுக்கு தொடர்பை ஏற்படுத்த வேண்டும். இதேபோன்று ஆண்களும் நினைவில் கொள்ள வேண்டும். பெண்கள் செய்த இத்தியாகம் பயனளிப்பதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும். ஒருசில ஆண்கள் கூறலாம். பெண்கள் என்ன தியாகம் செய்து விட்டனர்? எங்களிடம் பைசாவை வாங்கிதான் தியாகம் செய்தனர். நிச்சயமாக உங்களிடமிருந்துதான் பெற்றனர். ஆனால் பெற்றதை இறைவழியில் தருவதும் பெரும் தியாகமாகும். எவ்வாறிருப்பினும் இதனை செய்தால்தான் மஸ்ஜிதின் ஹக்கை நிறைவேற்றியவர்களாவீர்கள். பெர்லின் மஸ்ஜித் கட்டியதில் நீங்கள் பெற்ற பாடம் என்னவெனில், ஆண்கள் இபாதத் செய்பவர்களாக மாற வேண்டும் என்று பெண்கள் விரும்புகிறார்கள். கனடாவிலும் இவ்வாறே பெண்கள் ஒரு மில்லியன் டாலரில் பள்ளிவாசல் கட்டியுள்ளனர். இந்த தியாகம் எல்லா இடத்திலும் காணப்படுகிறது. பள்ளிவாசலுக்கு வரும் கடமை ஆண்களுக்கு உள்ளது. பெண்கள் விரும்பினால் வரலாம். பிறகு அவர்கள் சார்பாக ஏதாவது நிகழ்ச்சிகள் இருந்தால் வருவார்கள். எனவே அவர்கள் இறை திருப்திக்காகவே செய்தார்கள் என்பதறகு பெண்களின் இத்தியாகம் ஓர் ஆதாரமாகும். அவர்களின் இந்த சிந்தனை தியாகம் வீணாகாது என்று நம்புகிறேன். பெண்கள் தங்கள் குழந்தைகளைப் பற்றி சிந்தனை, அவர்களை இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்த செய்ய முயற்சிகள் போன்ற இதே சிந்தனையுடன் இருக்க வேண்டும். இந்த சிந்தனை பிறகு இறை திருப்தியைப் பெற்றுத் தரும் வழியாக அமையும்.

நான் ஓதிய வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ்வுடைய பள்ளிவாசலை நிர்வகிப்பவர்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு, இறுதி நாளின் மீது நம்பிக்கை கொண்டு தொழுகையை நிலைநாட்டி, ஸகாத் கொடுத்து அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் பயப்படாதவராக இருக்க வேண்டும். இம்மக்களே நேர்வழி பெற்றவர்களைச் சார்ந்தவர்களாவீர்கள்.

இதே அதிகாரம் தவ்பாவின் 71 வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான். நம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும் தங்களுக்கிடையே ஒருவருக்கொருவர் நண்பர்களாவர். அவர்கள் நல்லவற்றைக் கொண்டு ஏவுகின்றனர். தீயவற்றிலிருந்து தடுக்கின்றனர். தொழுகையை நிலைநாட்டுகின்றனர். ஸகாத்து கொடுக்கின்றனர். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு நடக்கின்றனர். இவர்களுக்கே அல்லாஹ் கருணை காட்டுவான். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனும், நுட்பமான ஞானமுள்ளவனுமாவான்.

இந்த பள்ளியின் நிர்மாணத்திற்கு பிறகு ஆண்களும் பெண்களும் இந்த முக்கியான பணியை கவனிக்க வேண்டும். நீங்களும் மஸ்ஜிதுடன் தொடர்புடன் இருக்க வேண்டும். உங்கள் குழந்தைகளையும் பள்ளியுடன் தொடர்புடையவர்களாக்க வேண்டும். ஏனெனில், அல்லாஹ்வின் மீதும், இறுதிநாளின் மீதும் ஈமான் கொண்டவர்களிடம் இந்த அடையாளம் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றான். ஈமான் என்றால் என்ன? உண்மையான நம்பிக்கையாளர் யார்? அதன் ஆழமான கருத்தின் பக்கம் சென்றால் நாம் மெய்சிலிர்த்து விடுவோம். நமது ஈமான் அத்தகைய தகுதியுடையது தானா? நமது ஈமானை இறைவனின் பார்வையில் உண்மையான ஈமான் என்று சொல்லத் தகுந்ததா? நாம் உண்மையான மூஃமின்களின் கூட்டத்தில் வருவோமா?

இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்தில் நம்மை இணைத்தது இறைவன் நம்மீது செய்த கருணையாகும். நாம் உண்மையான மூஃமின் ஆவதற்கு எண்ணற்ற இடங்களில் அவன் வழிகாட்டல்களை வழங்கியுள்ளான் ஓரிடத்தில் இறைவன் கூறுகிறான்: மூஃமின் என்பவர் யாரெனில் அவரது உள்ளத்தில் ஈமான் எழுதப்படும். அவர்கள் இறைவன் மற்றும் இறை திருப்திக்கு ஒவ்வொரு பொருளின் மீதும் முன்னுரிமை வழங்குகின்றனர். தக்வாவின் குறுகலான நுட்பமான வழிகளை இறைவனுக்காக கடைபிடிக்கின்றனர். அவனது அன்பில் மாய்ந்து போகின்றனர். இறைவழியில் சிலையைப் போன்று நிற்கின்ற ஒவ்வொரு பொருளையும் – அது ஒழுக்கக் குறைபாடாக இருப்பினும், கட்டுப்படாமையாக இருப்பினும், கவனமின்மை, சோம்பலாக இருப்பினும் அவற்றை தம்மை விட்டு அகற்றி விடுகின்றனர். இதுவே ஈமானாகும். இந்த ஈமான் தான் நம்மை முழுமையான மூஃமினாக மாற்றும். கட்டுப்படாமையின் செயல்களை செய்வது குறித்து ஓர் அஹ்மதியால் நினைத்துக்கூட பார்க்க முடியாது. நமது ஒழுக்கநிலையில் சிறு குறைபாடு இருந்தாலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கருத்தின்படி நாம் நமது நிலையை சீர்தூக்கிப் பார்க்கக் கடமைப் பட்டவர்களாவோம். அவை நமது ஈமானை பலவீனமாக்கக் கூடியவை. ஆனால் நமது ஒவ்வொரு செயலும் இறைதிருப்திக்காக இருக்கும் என்றால், நமது பலவீனங்கள் அல்லாஹ்வின் அருளால் விலகிவிடும் என்று நம்பலாம். பிறகு இதுவே நமது ஈமானை உறுதிப்படுத்தும். நாம் அன்றாட பணிகளை செய்கிறோம். இறை திருப்தியைப் பெறுவதற்காக ஒருவர் மற்றவரின் உரிமையை வழங்குகிறோம். நாம் இபாதத்தின் உரிமையை வழங்குகிறோம். இந்த இபாதத்துகள் நமது ஈமான் அதிகரிக்கக் காரணமாக அமையும். எனவே, இந்த தகுதியைப் பெற ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும். சில வேளை சில செயல்களை மனிதன் வேண்டுமென்றே செய்வதில்லை. ஆனால் கவனமின்மையும் சோம்பலும் அவனை செய்ய வைத்து விடுகிறது. அவற்றுள் இபாதத் செய்வதில் உள்ள பலவீனமும் அடங்கும். அவற்றுள் சில இறைவன் வெறுக்கத்தக்க செயல், இறைவன் எச்சரித்த செயல்கள். எனவே உங்கள் கடமைகளை நிறைவேற்றுங்கள். மனிதன் அலட்சியத்தால் இதனை நிறைவேற்றாவிட்டால் பிறகு சிறிது சிறிதாக அது ஈமானை பலவீனமடையச் செய்து அவனை ஷிர்க்கின் பக்கம் எடுத்துச் சென்று விடுகிறது. எனவே, ஓர் அஹ்மதி ஒவ்வொரு கடமையையும் நிறைவேற்ற ஒவ்வொரு நிமிடமும் தம்மை ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும். இந்த ஓர் நன்மையின் பக்கம் கவனமின்மை, அல்லது சோம்பல் காட்டுவது மூஃமினின் அடையாளம் அல்ல. நான் ஓதிய சூரா தவ்பாவின் 18 –வது வசனத்தில் இறைவன் கூறுகிறான்.

அல்லாஹ்வின் மீது ஈமான் முழுமையாக இருக்க வேண்டும். இறுதி நாளின் மீது முழுமையான ஈமான் இருக்க வேண்டும். இறுதிநாள் பற்றி ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்.

இன்று எனது உள்ளத்தில் ஓர் எண்ணம் வந்தது. முன்னுள்ள வஹீயின் மீது ஈமான் கொள்ள வேண்டும் என்று இறைவன் கூறியிருக்கும்போது உனது வஹீயின் மீது ஈமான் கொள்ள மட்டும் ஏன் இறைவன் கூறவில்லை. இதனை சிந்தித்துக் கொண்டிருக்கும்போது என் உள்ளத்தில் இல்காவாக போடப்பட்டது. **வல்லதீன யுஃமினூன பிமா உன்ஸில இலைக்க வமா உன்ஸில மின் கப்லிக வபில் ஆகிரத்திஹூம் யுவ்கினூன்** – இதில் மூன்று வஹீயைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. மா உன்ஸில மின் கப்லிக என்பது முன்னுள்ள நபிமார்களின் வஹீயாகும். ஆகிரத் என்பது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வஹீயாகும். ஆகிரத் என்றால் பின்னால் வரக்கூடியது. பின்னால் வரக்கூடியது என்ன?

இந்த இடத்தில் பின்னால் வரக்கூடியது என்பது குர்ஆனுக்குப் பிறகு இறங்கக் கூடிய வஹீயாகும். ஏனெனில், இதில் முன்னுள்ளவர்களின் வஹீ பற்றி கூறப்பட்டுள்ளது. ஆகிரத் என்பதற்கு நன்மை தீமையின் நாள் என்ற பொருளும் கண்டிப்பாக உள்ளது. இந்த பொருளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது வஹீயின் மூலம் தெளிவுபடுத்தியுள்ள பொருள் இங்கு உண்மையாகி உள்ளது. ஏனெனில், இக்காலத்தில் நிறைய பள்ளிவாசல்கள் உருவாகின்றன. ஆனால் உண்மையான பள்ளிவாசல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களின் பள்ளிவாசலேயாகும். ஏனெனில் ஈமான் பற்றிய சரியான விளக்கம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்தான் தர வேண்டியதிருந்தது. இறைவன் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்துவதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பணியாகவே இருந்தது. எனவே மஸ்ஜிதுகளின் உரிமையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்துதான் நிறைவேற்றுகிறது என்பது ஓர் ஆறுதலை வழங்கினாலும் ஒரு பயமும் உள்ளது. வெறுமனே ஈமான் கொண்டு பள்ளிவாசல்கள் கட்டுவதால் மட்டும் ஈமானின் உரிமை நிறைவேறி விடுமா? அல்லது இன்னும் சில பணிகள் செய்ய வேண்டியதுள்ளதா? மேற்கொண்டு செய்ய வேண்டிய பணிகள் குறித்தே அல்லாஹ் இந்த வசனத்தில் கூறுகின்றான். தொழுகையை நிலைநாட்டுங்கள். தொழுகையை நிலைநாட்டுவது பற்றி அல்லாஹ் இன்னோர் இடத்தில் தெளிவுபடுத்தியுள்ளான்.

ஐவேளை தொழ வேண்டும்; ஜமாஅத்துடன் தொழ வேண்டும். எனவே இவ்விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். பள்ளிவாசலின் அழகு அதனை நிரப்புபவர்கள் – ஐவேளை பள்ளிவாசலுக்கு வருபவர்களைக் கொண்டு அமைகிறது. அந்த பொறுப்பு உங்களுக்கு உள்ளது. பள்ளிவாசலை நிரப்ப தொழுகையை நிலைநாட்ட வேண்டும். இங்கு ஜெர்மனி மக்களைப் பற்றி உள்ள குறைபாடும் அதுவே. பிறகு ஏன் பள்ளிவாசல் கட்ட வேண்டும். உங்கள் மீதுள்ள இந்த குறைபாடும் நீங்க வேண்டும். நீங்கள் அஹ்மதிகள். இறைவன் முன் குனிவதற்காக முறைப்படி பள்ளிவாசலுக்கு வருபவர்கள் என்று புரிய வர வேண்டும். கட்டிடத்தை இம்மக்கள் வெறுமனே காட்டுவதற்காக கட்டவில்லை. மாறாக இங்கு ஓரிறைவனை வணங்குவதற்காக இப்பள்ளியை இம்மக்கள் எழுப்பி உள்ளனர் என்று உணர வேண்டும். இறைவன் கூறுகின்றான். அவர்கள் ஸக்காத் கொடுக்கின்றனர். தமது பொருள்களை வைத்து ஏழைகளையும் கவனித்துக் கொள்கின்றனர். ஜமாஅத்தின் தேவைகளையும் நிறைவேற்றுகின்றனர். பெரும் பொருள் தியாகம் செய்து ஒரு பள்ளிவாசலை உருவாக்கியது இங்குள்ள மக்களுக்கு ஒரு வியப்பை ஏற்படுத்தியுள்ளது. பெண்கள் செலவு செய்து ஒரு பள்ளிவாசலை உருவாக்கியுள்ளனர் என்று இங்குள்ள பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளனர். இப்படியெல்லாம் செய்ய முடியுமா என்று அவர்களுக்கு நம்பவும் முடியவில்லை. அல்லாஹ் கூறுகிறான். உலகிற்கு தெரிய வேண்டும். பள்ளிவாசல்கள் கட்டுவது, அதனை நிரப்புவது, பொருள் தியாகம் செய்வது எல்லாம் முன்னரைவிட அதிகரித்து உள்ளது. ஏன் அதிகரித்துள்ளது? இவர்களது முழுமையான தவக்குல் இறைவன் மீது உள்ளது. அதன் காரணத்தால் அதிகரித்து உள்ளது. ஏனெனில் ஒரு மூஃமினுடைய ஒவ்வொரு செயலும் இறையச்சத்தின் காரணத்தால் ஏற்பட வேண்டும். எனவே, அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப தனக்காக செய்யப்பட்ட தியாகத்தை பல மடங்கு அதிகமாக்கி தருகின்றான் என்ற ஆறுதல் ஏற்படுகிறது. உலகின் நிலை எவ்வளவு மோசமாக இருப்பினும் மூஃமின்கள் ஒரு தியாகத்திற்குப் பிறகு இன்னொரு தியாகம் செய்யத் தயாராக எந்த பயமும் இன்றி எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். பல உதாரணங்கள் இதற்கு உள்ளன. பல நாடுகளில் அதற்கு முன்னுதாரணங்கள் உள்ளன. பல நாடுகளில் அந்த உதாரணங்கள் காணப்படுகின்றன. உயிர், பொருள், கண்ணியத்தை தியாகத்தினை செய்ய எப்போதும் தயாராக இருக்கின்றேன் என்ற தனது உறுதிமொழியை நிறைவேற்ற அஹ்மதிகள் எப்போதும் தயாராக இருக்கின்றனர். இறைவன் அவர்களுக்கு ஹிதாயத்தின் வழியைக் காட்டி மஸீஹ் மற்றும் மஹ்தியை ஏற்றுக் கொள்ள வாய்ப்பு வழங்கியுள்ளான்.

சூரா தவ்பாவின் 71 வது வசனத்தில் இறைவன் கூறுகின்றான். மூஃமினான ஆண்களும், பெண்களும் ஒருவர் மற்றவருக்கு நண்பர்கள். ஒருவர் மற்றவரின் உரிமைய வழங்கினால்தான் நண்பராக இருக்க முடியும். மஸ்ஜித்களை நிரப்புவது மூஃமின்களின் பணி என்று நான் முதலில் ஓதிய வசனத்தில் இறைவன் கூறுகின்றான். அவர்கள் நல்லொழுக்கத்தில் முன்னேறுபவர்கள். ஒருவர் மற்றவரின் உரிமையை

வழங்குபவராக இருக்கின்றனர். அதற்காக இதன் பொருள் ஆண்களும், பெண்களும் ஒருவருக்கொருவர் நண்பர்களாக பழக வேண்டும் என்று பொருளல்ல. ஒருவருக்கொருவர் எந்த திரையும் இன்றி பழகலாம் என்று பொருளல்ல. மாறாக, பரிசுத்தத் தன்மை என்ற அடித்தளத்தில் அமைந்த ஒரு உறவு அவர்களிடம் உருவாக வேண்டும். ஒருவர் மற்றவர்களுக்காக தியாகம் செய்ய தயாராக வேண்டும். ஒரு மூஃமின் பேண வேண்டிய நல்லொழுக்கம் என்றால் என்ன? ஒருவருக்கொருவர் அன்பு, நேசத்துடன் பழகுதல் ஆகும். பகைமை, வெறுப்பு போன்ற தடைகள் அகன்று விடுதல் ஆகும். நான் சின்னச்சின்ன நன்மைகளையும் செய்வேன் என்று ஒருவர் விரும்ப வேண்டும். ஒவ்வொரு சின்னஞ்சிறு தீமையிலிருந்தும் விலக வேண்டும். சகோதரத்துவம் வளர முழுமையாக முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு இந்த வியப்பான உறவை கண்ணியம் செய்ய வேண்டும். அவ்வுறவை இறைவன் நிலைநாட்டியுள்ளான். ஒரு அஹ்மதிக்கு இன்னொரு அஹ்மதியுடன் இருக்க வேண்டிய உறவு அது ருஹ்மாஹும் பைனஹும் (தமக்கிடையில் அன்பு கொண்டவர்கள்) என்ற வசனத்திற்கு முன் மாதிரியாகத் திகழ வேண்டும். நம்மிடைய உள்ள ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும். நமது அமானத்தை நிறைவேற்ற வேண்டும். சுய நலம், பேராசை நமது ஈமானில் பலவீனத்தைக் காட்டி ஒருவர் மற்றவரின் உரிமையை பறிக்கும் நிலைக்கு சாய்ந்து விடக் கூடாது. நாம் ஒருவர் மற்றவருக்காக தியாகம் செய்யும் உணர்வு எந்த அளவுக்கு இருக்க வேண்டுமெனில், அதனை பார்க்கின்ற ஒருவருக்கு ஹப்லுல்லாஹ் – அல்லாஹ்வின் கயிறு தெரிய வேண்டும். தப்பெண்ணத்திற்கு எதிராக ஜிஹாது நம்மிடையே தென்பட வேண்டும். ஃபித்னா, ஃபஸாது (குழப்பங்களின்) முக்கிய காரணம் தப்பெண்ணமாகும். நாம் அந்த தகுதியை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். ஒவ்வொரு இடத்திலும் நமது தகுதியால் நாம் பிரித்துணரப்பட வேண்டும். நன்றியுணர்வு நம்மிடம் எந்த அளவு இருக்க வேண்டுமெனில் அதனால் ஒவ்வொரு வினாடியும் நாம் நன்மையில் முன்னேற வாய்ப்பு கிடைக்க வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப மன்னித்து விடும் பண்பு நமது அடையாளமாக விளங்க வேண்டும். நமது நேர்மை நீதியின் தகுதி உயர்வாக இருக்க வேண்டும். அதில் கருணையின் அம்சம் இருக்க வேண்டும். பிறகு அனைவரையும் நமது உறவினர் போன்று கருதி சுயநலமின்றி நம்மவருக்கும் பிறருக்கும் நன்மை செய்ய வேண்டும். நமது வாக்குறுதிகளை நிறைவேற்றுதல் நம்மை பிரித்தறியத் தக்க சிறப்புப் பண்பாக நம்மிடம் காணப்பட வேண்டும். அதன் மூலம் சகோதரத்துவம் நட்பு அதிகரிக்க வேண்டும். உலகமும் கண்ணை மூடிக் கொண்டு அதனை ஒப்புக்கொள்ள வேண்டும். ஒருவர் மற்றவருக்கு கண்ணியம் செய்தல் எப்போதும் நமது கவனத்தில் இருக்க வேண்டும்.

ஆண்கள், பெண்களிடம் ஒருவருக்கொருவர் பார்வையைத் தாழ்த்தும் பழக்கம் இருக்க வேண்டும். அது நமது வாழ்வின் அங்கமாகி விட வேண்டும். அஹ்மதி பெண்கள் தமது பர்தா ஆடைகளில் திரைகளில் முழுமையான பேணுதல் உடையவர்களாக இருக்க வேண்டும். இவ்விஷயத்தில் மிகவும் எச்சரிக்கை உணர்வு தேவை. பக்கத்து வீட்டாரின் உரிமையை வழங்குவதில் எப்போதும் கவனம் தேவை. பக்கத்து வீட்டார் எனில் தமது வீட்டுக்கு பக்கத்து வீட்டார் மட்டுமல்ல. பயணத்தில் பக்கத்தில் பயணம் செய்பவர், ஒன்றாக வேலை செய்பவரும், ஜமாஅத் அன்பர்களும் ஒருவருக்கு அண்டை அயலாரின் உரிமை பெறத்தக்கவர்.

எல்லா வகையான நல்லொழுக்கக் குறைபாடும் நம்மை விட்டு அகல வேண்டும். உரிமையை வழங்க வேண்டும். செயல்ரீதியாக மூஃமின் என்று அழைக்கப்படத் தகுதி பெற வேண்டும். பிறகு இதே வசனத்தில் தொழுகை நிலைநாட்டுமாறு கட்டளையும் உள்ளது. ஸக்காத் பற்றியும் வருகிறது. முதலில் விளக்கினேன். அத்தகைய மக்களே தமது அமல்களை சரியாக்கிக் கொள்பவர். ஏனெனில் அவர்கள் அல்லாஹ் ரஸூலுக்கு கட்டுப்படுபவர்.

இந்த வசனத்தில் மூஃமினின் ஒரு சிறப்பம்சம் விளக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஒருவர் மற்றவரின் உரிமையை வழங்குகின்றனர். ஜமாஅத் உறுதியான உடல் போன்று ஆகி விடும். நன்மைகளை ஏவுகின்றனர். தீமைகளைத் தடுக்கின்றனர். தமது இபாதத்துகளை பாதுகாக்கின்றனர். நன்மைகளை ஏவுவது பற்றி அல்லாஹ் ஓரிடத்தில் கூறுகின்றான். நீங்கள் மனிதகுலத்தின் நன்மைக்காக உருவாக்கப்பட்ட சமுதாயம் ஆவீர்கள். நல்ல விஷயங்களை ஏவுகின்றீர்கள். தீமைகளைத் தடுக்கின்றீர்கள். பிறகு அவர்கள் இறைவன்

மீது ஈமான் கொள்கின்றார்கள். எனவே இந்த அடையாளங்களுடன் சிறந்த சமுதாயம் ஆக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் நன்மையின் பக்கம் செல்லக் கூடியவர்கள். இறைவன் தடுத்தவற்றின் பக்கம் செல்லாதீர்கள். அப்போதுதான் காலத்தின் இமாமிடம் பைஅத் செய்ததில் பலன் கிடைக்கும். பள்ளிவாசல்களைக் கட்டியதில் பலன் கிடைக்கும். பிறகு நான்காவது விஷயமாக கூறப்பட்டுள்ளது என்னவென்றால் அவர்கள் தமது தொழுகைகளைப் பேணுவார்கள். தொழுகைகளை முறையாக நிறைவேற்றுவார்கள். ஜமாஅத்துடன் தொழுவார்கள். ஸக்காத் பொருள் தியாகம் செய்வது ஐந்தாவது அடையாளமாக கூறப்பட்டுள்ளது. அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கட்டுப்படுதல் அதில் முன்னேற்றம் பெறுதல் என்ற பண்பும் இவர்களிடம் இருக்கும். இந்த கட்டுப்படுதலின் விளைவால்தான் இங்கு புதிதாக வந்த மக்களுக்கு காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது. எனவே, உங்கள் முன்னோருக்கும் துஆ செய்யுங்கள். அவர்கள் அஹ்மதிய்யத்தை முன்னரே ஏற்றிருந்தனர். ஒவ்வொரு வளர்ச்சி வெகுமதியையும் இறைவன் வழங்குகின்றான். பழைய அஹ்மதிகள் சிந்திக்க வேண்டும். உங்கள் முன்னோர்களின் நற்செயல்கள் இறைவனுக்கு விருப்பமானதாக இருந்ததாலேயே அஹ்மதிய்யத்தை அவர்கள் ஒப்புக் கொண்டனர். நீங்கள் அதன் பலனை அனுபவிக்கின்றீர்கள். அவர்களுக்காகவும் துஆ செய்து வாருங்கள். அவர்கள் மரணித்து விட்டனர். அல்லாஹ் அவர்களின் தகுதியை உயர்த்திக் கொண்டே செல்வானாக. பிறகு இறைவன் அவ்வசனத்தின் இறுதியில் கூறுகின்றான். எவர்கள் இவற்றை கடைபிடிப்பார்களோ அவர்கள் இறைவனின் ரஹ்மத்தைப் பெறுவார்கள். அல்லாஹ் அவர்களுக்கு கருணை காட்டுவான். அல்லாஹ் ஒருவருக்கு கருணை காட்டினால் கருணை காட்டிக் கொண்டே செல்கின்றான்.

நம்மில் ஒவ்வொருவரும் அவனது ரஹ்மத்திலிருந்தும் பங்கு பெறுபவர்களாக அல்லாஹ் ஆக்குவானாக. இந்த பள்ளிவாசலின் உரிமையை செலுத்துபவர் களாவோமாக. இங்குள்ள மக்களின் கவனம் நம் பக்கம் திரும்புகிறது. பத்திரிகைகள் நம்மைப் பற்றி செய்தி வெளியிடுகின்றன. நேற்றைய பத்திரிகைச் செய்தி இன்று எனக்கு கிடைக்கவில்லை. ஆனால் செய்தி வந்திருக்கும் என்று நம்புகிறேன். அதிலிருந்தும் நாம் பயனடைய வேண்டும். அந்த பயன் என்னவென்றால், நம்மிடம் மக்கள் வைத்துள்ள எதிர்பார்ப்புகள் மற்றும் அடியானிடம் அல்லாஹ் வைத்துள்ள எதிர்பார்ப்புகளை நாம் நிறைவேற்ற வேண்டும். ஆகவே, இதற்கு முயற்சி செய்யுங்கள். அல்லாஹ்வுடைய இந்த வெகுமதியிலிருந்து நாம் பயன் பெற வேண்டும்.

பயன் பெறுவதற்கு இபாதத் மற்றும் நல்ல முன்மாதிரியை நிலைநாட்ட வேண்டும். நமது வாழ்வை இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் கட்டளைக்கு ஏற்ப அமைக்க முயற்சி செய்ய வேண்டும். நமது சந்ததிகளிலும் இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் மீது அன்பை உருவாக்க வேண்டும். அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் உண்மையான கட்டுப்படுதல் அவர்களிடம் உருவாக வேண்டும். அல்லாஹ் அனைவருக்கும் அதற்கு தவ்ஃபீக் தருவானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT MASJID KHADHEEJA, BERLIN-GERMAN**

**ON 17.10.2008**

Translated by : **Maullim M. Nizamudeen Sb.**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**

ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**